**செய்தி வெளியீடு எண். 678** **நாள்– 12.08.2010**

## தமிழகம் முழுவதும் திரவ எரிவாயு மூலம் இயங்கும் 8 ஆயிரம் புதிய ஆட்டோ ரிக்ஷாக்கள்!

## முதலமைச்சர் கலைஞர் அனுமதி ஆணைகளை வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்!

தமிழகம் முழுவதும் பெருகிவரும் போக்குவரத்துத் தேவைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், புதிய ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு அனுமதி ஆணைகள் (Permits) வழங்கிட 12 ஆண்டுகளாக இருந்த தடை 13.5.2010 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ரத்து செய்யப்பட்டது. இதன்மூலம் ஏழை எளிய மற்றும் படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெற வழி பிறந்துள்ளது.

புதிய ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு அனுமதி ஆணை வழங்குவதில் இருந்த தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, சென்னை மாநகரில் 55 ஆயிரம் பேரும், மாவட்டங்களில் 23 ஆயிரம் பேரும் என மொத்தம் 78 ஆயிரம் பேர் புதிய ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு அனுமதி ஆணைகள் வழங்கிடக் கோரி விண்ணப்பித்தனர். விண்ணப்பித்த அனைவருக்கும் போக்குவரத்துத்துறைமூலம் அனுமதி ஆணை அளிப்பதற்கான செயல்முறை ஆணைகள் முன்னதாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த செயல்முறை ஆணை பெற்றவர்களில், சென்னை மாநகரில் 3 ஆயிரத்து 100 பேருக்கும், மாவட்டங்களில் 4900 பேருக்கும் ஆகமொத்தம் 8 ஆயிரம் பேருக்கு புதிய ஆட்டோ ரிக்ஷாக்களை இயக்குவதற்கான அனுமதி ஆணைகளை வழங்குவதற்கு அடையாளமாக, புனித ஜார்ஜ் கோட்டையில் இன்று (12.8.2010) நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலைஞர் 10 பேருக்கு அனுமதி ஆணைகளை வழங்கி, இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் அனைத்தும் திரவ எரிவாயு மூலம் இயங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக இவற்றால் சுற்றுச் சூழலில் காற்று மற்றும் ஒலி மாசுகள் ஏற்படுவது முழுவதும் குறையும். தற்போது பெட்ரோல் மூலம் இயக்கப்பட்டுவரும் ஆட்டோ ரிக்ஷாக்களும் படிப்படியாக திரவ எரிவாயு மூலம் இயங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் மட்டும் வாகனங்களுக்குத் திரவ எரிவாயு நிரப்பும் 27 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் தேவைக்கேற்ப எரிவாயுவை வழங்கிடவும் தொடர்ந்து விநியோகம் செய்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்குவோர்க்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி 100 கோடி ரூபாய் அளவுக்குக் கடனுதவி வழங்குகிறது.

மேலும், போக்குவரத்துத்துறையில் பணியாற்றியபொழுது மறைந்த 5 பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.துரைமுருகன், போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், உள்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., உள்துறைச் சிறப்புச் செயலாளர் திரு.ச.கருத்தையாபாண்டியன்,இ.ஆ.ப., போக்குவரத்துத்துறை செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., போக்குவரத்து ஆணையர் முனைவர் மூ.இராசாராம், இ.ஆ.ப., ஆகியோருடன் அரசு உயரதிகாரிகளும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் செயல் இயக்குநர் திருமதி நிப்பூர் மித்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்களும், வங்கி அதிகாரிகளும் உடனிருந்தனர்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை , சென்னை-9